செ.வெ. எண்: 42 நாள்: 15-09-2017

# பத்திரிகை செய்தி

## 15.09.2017 முதல் 02.10.2017 வரை திருநெல்வேலி மாவட்டத்தின் 'தூய்மையே சேவை' நிகழ்ச்சிகள்

02 அக்டோபர் 2014 முதல் தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் இந்திய முழுவதும் தூய்மை மற்றும் சுகாதார பணிகள் நடைபெற்றுவருகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தை வருகின்ற அக்டோபர் மாதத்திற்குள் திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற தூய்மையான மாவட்டமாக மாற்றிட மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தூய்மை மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்தை பொது மக்களுக்கு வலியுறுத்தும் நோக்கில் இந்திய அரசு அனைத்து மாவட்டங்களிலும் "தூய்மையே சேவை" எனும் நிகழ்ச்சியினை வருகின்ற **15 செப்டம்பர் 2017** முதல் **02 அக்டோபர் 2017** வரை நடத்திட திட்டமிட்டுள்ளது.

அதன் தொடக்கமாக 15.09.2017 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அனைத்து துறை அலுவலர்களும் தூய்மையே சேவை உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மேலும் மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளிலும் பொதுமக்கள் மற்றும் சுய உதவி குழுவினரால் மனித சங்கிலி மற்றும் உறுதிமொழி எடுக்கப்பட்டதுவருகின்ற 17.09.2017 அன்று மாவட்ட தூய்மை ரதம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட உள்ளது. மேலும் கிராமப்புறங்களில் கட்டி முடிக்கப்படாத கழிப்பறைகளை துரிதமாக கட்டிமுடிக்கும் பணிகளும் இந்நிகழ்ச்சியின் மூலம் மேற்கொள்ளப்படும். இதுமட்டுமின்றி வருகின்றன 23.07.2017 சனிக்கிழமை அன்று 10, 000 கல்லூரி மாணவர்களால் தாமிரபரணி ஆறு தூய்மைப்படுத்தும் பணி திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகளில் முக்கிய பகுதியாக 18.09.2017 முதல் 01.10.2017 மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள், பள்ளிக்கூடங்கள், அங்கன்வாடிகள், மருத்துவமனைகள், அரசு கட்டிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், கோயில்கள் என பல்வேறு பகுதிகள் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள், பொது மக்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவனங்களால் சுத்தம் செய்யப்பட உள்ளது என மாவட்ட ஆட்சியர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தன்னார்வமாக முன் வந்து தூய்மை பணியில் ஈடுபட விரும்பும் குழுக்கள், கல்லூரிகள், பள்ளிகள், நிறுவனங்கள் தங்கள் சுத்தம் செய்யும் இடத்தை – சுத்தம் செய்வதற்கு முன் மற்றும் சுத்தம் செய்ததற்கு பின் என புகைப்படம் எடுத்து சிறு குறிப்புடன் **tiruneiveli.zsbp@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இந்நிகழ்வில் சிறப்பாக பங்குபெறும் அனைத்து பள்ளிகள், கல்லூரிகள், குழுக்கள், நிறுவங்களுக்கும் மாவட்ட நிர்வாகம் பரிசளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு +91 8667351812, 7373096300 எண்களை தொடர்பு கொள்ளலாம்.

(ஒப்பம்) 15/9/17

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
திருநெல்வேலி மாவட்டம்

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி.